செய்தி வெளியீடு எண் : 1133 நாள் : 09.06.2023

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.6.2023) காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்ய நேற்று இரவு திருச்சி மாவட்டத்திற்கு வருகை புரிந்தார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் சுற்றுலா மாளிகையில், இவ்வாண்டு காவிரி பாசனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தூர்வாரும் பணிகள் குறித்த குறும்படத்தை பார்வையிட்டார்.

2023–2024ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், நீர்வளத்துறையின் மூலம் கால்வாய்கள் சீரமைப்பு, ஏரிகள் புனரமைப்பு, அணைக்கட்டுகள் புதுப்பித்தல், மழைநீர் சேகரிப்பு போன்ற எண்ணற்ற திட்டங்கள் உழவர்களையும் உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் காவிரி பாசனப் பகுதிகளில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்களில் தூர்வாரும் பணிகள் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2023–24ஆம் ஆண்டு திருச்சி மண்டலத்தை சார்ந்த பாசன ஆதாரங்களில் தூர்வாரப்படுகின்ற பணிகளின் விவரம்.

சேலம் மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 பணிகளும், நாமக்கல் மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பணிகளும், திருச்சி மாவட்டத்தில் 15.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 பணிகளும், கரூர் மாவட்டத்தில் 6.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 பணிகளும், அரியலூர் மாவட்டத்தில் 3.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13 பணிகளும், பெரம்பலூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 பணிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 20.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 189 பணிகளும், திருவாரூர் மாவட்டத்தில் 12.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 111 பணிகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 பணிகளும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 8.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 51 பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 பணிகளும் மற்றும் கடலூர் மாவட்டத்தில் 10.00 கோடி மதிப்பீட்டில் 55 பணிகளும் என மொத்தம் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4773.13 கிலோ மீட்டர் தூரத்திற்கு, 691 பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு, நிகர சாகுபடி பரப்பினை உயர்த்தவும், நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தவும், கால்வாய்கள், வாய்க்காய்கள், ஏரிகள் போன்றவற்றை புனரமைத்து பாதுகாக்கும் பணிகளை ஆண்டுதோறும் நேரில் ஆய்வு செய்து வருகிறார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் நடத்தும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயப் பெருமக்கள் கோரும் இடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வார ஆணையிட்டு, அப்பணிகள் நடைபெறும் இடங்களில் நேரில் ஆய்வு செய்தார்.

**தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடியில் உள்ள முதலை முத்துவாரி மற்றும் விண்ணமங்கலத்தில் உள்ள "சி" பிரிவு வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வு :**

தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடி கிராமத்திலுள்ள முதலைமுத்துவாரி வடிகால் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் 3.50 கி.மீ. தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். இத்தூர்வாரும் பணி மேற்கொள்வதால் சென்னம்பட்டி, குருவாடிப்பட்டி மற்றும் நாட்டாணி கிராமங்களில் மழையினால் ஏற்படும் வெள்ள சேதங்கள் தடுக்கப்படுவதோடு வண்ணாரப்பேட்டை கிராமத்திலுள்ள சுமார் 2,042 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும் தஞ்சாவூர் மாவட்டம் விண்ணமங்கலத்தில் உள்ள "இ" பிரிவு வாய்க்காலின் வேளாண்பொறியியல் துறை மூலம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 2.50 கி.மீட்டர் தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதால் பூதராயநல்லூர், விண்ணமங்கலம், தீச்சசமுத்திரம் மற்றும் வெங்கடசமுத்திரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 450 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் உள்ள கூழையாறு வடிகால் மற்றும் ஆலத்தூர் மற்றும் இலால்குடி வட்டத்தில் உள்ள இருதயபுரம் மற்றும் வெள்ளனூரில் நந்தியாறு வடிகாலில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வு :**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள கூழையாற்றில் ரூ.194.80 இலட்சம் மதிப்பீட்டில் 7.79 கி.மீ தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வு செய்தார். இவ்வடிகால் தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதால் மேட்டுப்பட்டி, திண்ணியம், செங்கரையூர் மற்றும் டி.கல்விக்குடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நிலங்கள் வெள்ளப் பாதிப்பில் இருந்து தடுக்கப்படும்.

தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆலத்தூர் மற்றும் இலால்குடி வட்டங்களில் அமைந்துள்ள இருதயபுரம் மற்றும் வெள்ளனூர் கிராமங்களில் நந்தியாற்றின் நீரோட்ட பாதையில் உள்ள முட்செடிகளை முழுவதுமாக அகற்றி அதனை 5.90 கி.மீ. நீளம் தூர்வாரி இரு பக்கக் கரைகளையும் பலப்படுத்திட ரூ.194.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் ஆய்வு செய்தார். இதன் மூலம், ஊட்டத்தூர், நம்புக்குறிச்சி, பெருவளப்பூர், காணக்கிளியநல்லூர், வந்தலை கூடலூர், சங்கேந்தி மற்றும் வெள்ளனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5777 ஏக்கர் பாசனப் பரப்புகள் வெள்ள பாதிப்பிலிருந்து தடுக்கப்படும்.

இந்த தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டால், மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன வாய்க்கால்களில் உரிய நேரத்தில் கடைமடை வரை தங்குதடையின்றி சென்றடையவும் மற்றும் வெள்ளக்காலங்களில் விரைவில் தண்ணீர் வடியவும் ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்த இடங்களில் விவசாயப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், கோரிக்கை மனுக்களை அளித்து தங்களது தேவைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. பழனிமாணிக்கம், திரு. ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன், திரு.எ.சௌந்திரபாண்டியன், திரு.என்.தியாகராஜன், திரு.எஸ்.ஸ்டாலின் குமார், திரு. ஜவாஹிருல்லா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திரு.சந்தீப் சக்ஷேனா, இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in